(இ) இளநிலை மருத்துவ மாணவர்கள், Hippocratic உறுதிமொழிக்குப் பதிலாக மகரிஷி சரக் சபத் (Maharishi Charak Shapath) உறுதிமொழி ஏற்க வேண்டுமென்று வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலங்காலமாக மருத்துவக் கல்லூரிகளில் சேரக்கூடிய முதலாம் ஆண்டு மாணவர்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Zero hour. *சுருக்கமாக அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலங்காலமாக மருத்துவக் கல்லூரியில் சேரக்கூடிய முதலாம் ஆண்டு மாணவர்கள்* White Coat Ceremony *என்று சொல்லக்கூடிய வெள்ளை மேலாடை அணிவிக்கக்கூடிய அந்த நிகழ்வில் நவீன மருத்துவத்தினுடைய தந்தை என்று போற்றப்படுகின்ற* Hippocratic Oath*–ஐ எடுத்து வருவதுதான் பாரம்பரியமாக இருக்கின்றது. 'மனிதாபிமானத்திற்கு எதிராக செயல்பட மாட்டேன்; மனச்சான்றுடனும் கண்ணியத்துடனும் சேவை செய்வேன்; நோயாளிக்கே முன்னுரிமை தருவேன்' என்று அந்த* Hippocratic *உறுதிமொழி சொல்கிறது. ஆனால், கடந்த பிப்ரவரி மாதம்* National Medical Commission, *ஆயுர்வேத மருத்துவரான மகரிஷி சரகருடைய சரகர் சம்ஹிதி நூலில் உள்ள சமஸ்கிருத உறுதிமொழியை எடுக்க வேண்டும் என்று பரிந்துரைத்திருக்கின்றது. இது ஒருவகையிலே, கல்வி என்பது ஒத்திசைவு பட்டியலில்* concurrent list*–ல் தான் இருக்கின்றது. இப்படியொரு பரிந்துரை செய்தாலும், அது மாநில அரசு வழியாகத்தான் மருத்துவக் கல்லூரிகளுக்குச் சென்றிருக்க வேண்டும். நேரடியாக சென்றதன் விளைவாக சில சுயநிதி மருத்துவக் கல்லூரிகளிலும், சில நாட்களுக்கு முன்பு மதுரை மருத்துவக் கல்லூரியில் நம்முடைய மாண்புமிகு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அன்றைக்கு அந்த மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற சம்பவத்தை மட்டும் சொல்லி சுருக்கமாக முடித்துக்கொள்ளுங்கள்; நேரமில்லை.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மாண்புமிகு அமைச்சர்கள் பங்கு கொண்ட அந்த நிகழ்வில் இந்த* White Coat Ceremony*-ல் 'சரக் சபத்' என்ற அந்த உறுதிமொழியை எடுத்திருக்கின்றார்கள். இதன்காரணமாக அந்த மருத்துவமனையின்* Dean suspend *செய்யப்பட்டிருக்கின்றார்; பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார். இதனைத் தொடர்ந்து இராமநாதபுரம் மருத்துவக் கல்லூரியிலும் இந்த நிகழ்வு நடைபெறுகின்றது. இது ஒருவகையில் மாநில அரசாங்கத்தினுடைய உரிமையில் தலையிடுவதாக இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் பணிநீக்கம் செய்யப்பட்டாரா அல்லது காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருக்கிறாரா?*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மருத்துவக் கல்லூரியினுடைய* Dean *காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருக்கின்றார். இதனைத் தொடர்ந்து இராமநாதபுரத்திலும் இந்த நிகழ்வு நடைபெறுகின்றது. இதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய அரசு மருத்துவக் கல்லூரிகளிலும், அரசு உதவி பெறக்கூடிய மருத்துவக் கல்லூரிகளிலும் காலங்காலமாக இருக்கக்கூடிய* Hippocratic Oath*-ஐ நம்முடைய மாணவர்கள் எடுப்பதற்கான வழிவகைகளை இந்த அரசு செய்ய வேண்டும் என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். உங்களுடைய கருத்தைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

[2022 மே 4

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மருத்துவக் கல்லூரியில் எடுக்கப்பட்டிருக்கிற உறுதிமொழி இதுவரை இருந்து வந்த நடைமுறைகளுக்கு மாறானது. புதிதாகப் புகுத்தப்பட்டிருக்கிற ஒன்றாகவே நாம் இதனைப் பார்க்க முடிகிறது. இப்படிப் புதிதாக வருகிற நேரத்தில், வடமொழியில், மற்ற மொழிகளில் அவரவர் விருப்பத்திற்கு உறுதிமொழியை எடுத்துக்கொண்டால், அது பல்வேறு மாற்றங்களை உருவாக்குவதற்கு வழிவகுக்கும் என்ற காரணத்தினால், இதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேலும், தெரிந்தோ, தெரியாமலோ அக்கல்லூரியின் முதல்வர் அவர்கள் அவ்வாறு உறுதிமொழி எடுப்பதற்கு ஒத்திசைவாக இருந்திருக்கிறார். எனவே, அரசு அதுகுறித்து மீண்டும் மறுபரிசீலனை செய்து, அவர் பணியில் தொடர்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இப்படிப்பட்ட புதுமையான நிகழ்வுகள் நடைபெறுவது அரசின் கவனத்திற்கு வந்து, அதற்குப் பிறகு அவ்வாறு நடந்தால், அது ஏற்புடையதாக இருக்கும். ஆகவே, இதுகுறித்து, அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். மேலும், இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடக்காது என்பதற்கும் அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள். தங்களுடைய கருத்தை ஒரு வார்த்தையில் சொல்லி, அழகாக முடித்துவிடுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, Hippocratic உறுதிமொழி எடுக்கப்படுவது தொடர்ந்து நடைமுறையாக இருந்து வருகிறது. புதிய மருத்துவ மாணவர்கள் அங்கிகளை (coat) அணிந்து வந்து, இந்த உறுதிமொழியினை எடுப்பார்கள். ஆனால், சில தினங்களுக்கு முன்பாக மதுரை மருத்துவக் கல்லூரியில், வழக்கத்திற்கு மாறாக, 'Maharishi Charak Shapath' என்ற உறுதிமொழியை எடுத்திருக்கிறார்கள். இதனை சமஸ்கிருதத்தை முன்னெடுக்கும் வாய்ப்பாக நாங்கள் கருதுகிறோம்.

2022 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *ஏற்கெனவே, 11–2–2022 அன்று இதைப் பற்றி 'சமஸ்கிருதத்தை எப்படி* RSS *புகுத்த நினைக்கிறது' என்ற* article *வந்திருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *ஆகவே, இனி வருங்காலங்களில் இப்படிப்பட்ட சமஸ்கிருதத் திணிப்பை நாம் அனுமதிக்கக் கூடாது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S.S. *பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புறம் ஒட்டுமொத்தத் தமிழக மக்களுடைய உணர்வுகளை ஒன்று சேர்த்துப் பிரதிபலிக்கும் வகையில் அனுப்பப்பட்டிருக்கக்கூடிய* NEET *தேர்விலிருந்து விலக்கு தொடர்பான மசோதா அப்படியே கிடப்பிலிருக்கிறது என்று சொன்னால், இந்த விவகாரத்தில் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்கள்* Thiru. Anto Antony, Thiru. Adoor Prakash, Thiru. Kumbakudi Sudhakaran, Dr. Mohammad Jawed, Thiru. Karti P. Chidambaram *ஆகியோர் பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு பாராளுமன்றத்திலே கொடுத்திருக்கிற விடை என்னவென்றால்,* "As informed by the National Medical Commission, there is no proposal of replacement of Hippocratic Oath with Charak Shapath" *என்று 25–3–2022 அன்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி.*

திரு. S.S. பாலாஜி: *ஆனால் அதற்கு முன்பாக,* National Medical Commission, *7–2–2022 அன்று* "No Hippocratic Oath. During White Coat Ceremony (with parents) the Oath should be replaced by Maharishi Charak Shapath" *என்று சொல்லப்பட்டிருக்கிறது.* National Medical Commission *ஒரு தவறான தகவலை மக்களவையில் தெரிவித்திருக்கிறது என்பதையும்*

இந்த விவகாரத்தில் தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி மாணவர்களைப் பொறுத்தவரையில் உலகம் முழுவதிலும் பல ஆண்டுகளாக, தொடர்ந்து பெரும்பாலான அனைத்து நாடுகளிலும், Hippocratic உறுதிமொழியைத்தான் எடுத்து வருகிறார்கள். Hippocratic என்பவர் ஆங்கில மருத்துவத்தின் தந்தை என்று உலகளவில் போற்றப்படுபவர். அவருடைய பெயராலேதான், மனிதநேயத்தின் அடிப்படையில் கூறப்பட்ட கருத்துகளைத்தான் உறுதிமொழியாகத் தொடர்ந்து ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில், பிப்ரவரி 7 ஆம் தேதி, தேசிய மருத்துவ ஆணையம் Hippocratic உறுதிமொழிக்குப் பதிலாக 'Maharishi Charak Shapath' என்கின்ற ஒரு புதிய உறுதிமொழியை ஏற்கவேண்டுமென்று தெரிவித்துள்ளதாக வலைதளங்களில் செய்திகள் பரவின. இந்தச் செய்தி பரவியவுடனேயே, இத்துறையின் செயலாளர், மரியாதைக்குரிய திரு. ராதாகிருஷ்ணன், I.A.S., அவர்கள், உடனடியாக தமிழகத்தில் இருக்கிற அனைத்து மருத்துவக் கல்லூரி முதல்வர்களுக்கும் ஒரு தாக்கீது அனுப்புகிறார். அதில் 'கல்லூரி முதல்வர்கள் தேவையில்லாமல் இதுபோன்ற சர்ச்சைகளில் சிக்கிக்கொள்ள வேண்டாம். நீங்கள் புதிதாக எந்தவொரு உறுதிமொழியினையும் ஏற்றுக்கொள்வதற்கு உறுதுணையாக இருக்கக் கூடாது. Hippocratic உறுதிமொழி மனிதநேயத்தின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.' என்று உள்ளது 'Maharishi Charak Shapath' சமஸ்கிருதத்திலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது என்று சொன்னாலும், எதிர்காலத்தில், அதாவது, இந்த உறுதிமொழி எடுக்கப்பட்ட பிறகு, அடுத்த 5, 10 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த உறுதிமொழியினை சமஸ்கிருதத்தில்தான் எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தப்படும். அந்தமாதிரியான நிலைகள் வருகிறபோது, தமிழகத்தில் பெரிய அளவில் ஒரு மொழித் திணிப்பாக அமைந்துவிடும்.

2022 மே 4] [திரு. மா. சுப்பிரமணியன்]

முற்பகல் 11–20

பொதுவாகவே, இந்தியா முழுமைக்கும் சமஸ்கிருத மொழியைப் பேசுபவர்கள் மொத்தம் 24,000 பேர்தான் இருக்கிறார்கள் என்று அவர்களே அவர்களுடைய பதிவேட்டில் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையில், அந்த மொழித் திணிப்பு தமிழகத்தில் கூடாது என்பது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய விருப்பம். அந்த வகையில் செயலாளர் அவர்கள் இந்த அறிக்கையை அனுப்பினார்கள். அனுப்பியதற்கு பிறகு 11 ஆம் தேதியன்று D.M.E.—Director of Medical Education, அவருமே, மருத்துவக் கல்லூரிகளுக்கு இந்த ஆணையை அனுப்பினார். அதற்குப் பிறகு மார்ச் 29 ஆம் தேதியன்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் குடும்ப நலத் துறையின் இணை அமைச்சர் Dr. Bharati Pravin Pawar அவர்கள் தேசிய மருத்துவ ஆணையம் தெரிவித்திருக்கிற இதுபோன்ற பிரமாணத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளச் சொல்லவில்லை, நாங்கள் 'Maharishi Charak Shapath'-ஐ ஏற்றுக்கொள்ள வலியுறுத்தவில்லையென்று வெளிப்படையாகவே நாடாளுமன்ற மாநிலங்களவையில் சொல்லியிருக்கிறார். இந்த நிலையில், மதுரை மருத்துவக் கல்லூரியிலும், இராமநாதபுரம் மருத்துவக் கல்லூரியிலும் 'Maharishi Charak Shapath' உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டதாகச் செய்திகள் வெளியானது. வெளியான உடனேயே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், ஒரு புதிய அணுகுமுறை தமிழகத்தில் வந்துவிடக் கூடாது என்பதற்காக, உடனடியாக அதனை விசாரிக்கச் சொன்னார்கள், விசாரிக்கப்பட்டு அந்தக் கல்லூரியின் முதல்வர், தற்போது காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு ஆதரவாக மருத்துவர்கள் சங்கம் ஒன்று, அவருக்குத் தெரியாமல் இது நடந்துவிட்டது; எப்படியோ சமூக வலைதளங்களில் பரவிய செய்தியைக் கொண்டு மாணவர்கள் அதைப் படித்தார்கள் என்றார்கள். உடனடியாக நேற்றைக்கு DME-ஐ சென்னையிலிருந்து மதுரைக்கு அனுப்பி விசாரிக்கச் சொன்னோம். விசாரித்ததில், அவருக்குத் தெரியாது என்று முழுமையாக ஒதுக்கிவிட முடியாது, என்றாலும்கூட Dean கட்டுப்பாட்டில்தான் கல்லூரி இருக்கிறது. அவர் அம்மருத்துவக் கல்லூரியின் துணை முதல்வர் என்கின்ற வகையில், இவரும் அதற்குப் பொறுப்பேற்றே தீர வேண்டும் என்கிற நிலை இருக்கிறது. ஆனாலும்கூட, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருப்பதைப் போல், 'Hippocratic

என்று சொல்லப்படுகிற உறுதிமொழி என்பது, "என்னுடைய நோயாளிகளின் நலனுக்காக என்னாலான அனைத்து முயற்சிகளையும் செய்வேன்; அதேபோன்று தேவைக்கு அதிகமான மருத்துவமும் செய்ய மாட்டேன், எதுவும் பயனற்றது என்று எதிர்மறைக் கருத்தும் கொள்ளமாட்டேன்." இது இளம் மருத்துவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதிமொழி. "எனக்குத் தெரியாது என்று சொல்வதற்கு வெட்கப்பட மாட்டேன், இன்னொரு மருத்துவரின் சேவை தேவை என்றால் அதனைத் தயங்காமல் பயன்படுத்துவேன். மருந்துகளைவிட, அறுவை சிகிச்சை சக்தியைவிட, அன்பும் கனிவும், மிகுதியாகத் தேவை என்பதை எப்போதும் மறவேன்." இது 'Hippocratic' உறுதிமொழி. ஆனால், இப்போது புதிதாக இவர்கள் சொல்லிவருகிற 'Maharishi Charak Shapath' என்பதில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. "பசு மற்றும் பிராமணர்களுக்காக மருத்துவர்கள் தொழுகை செய்ய வேண்டும். அது மட்டுமல்ல, மன்னரின் எதிரிகளுக்கும், மன்னனை வெறுப்பவர்களுக்கும், மக்களால் வெறுக்கப்படுபவர்களுக்கும் நான் மருத்துவம் பார்க்க மாட்டேன்." பொதுவாகவே, மருத்துவர்களுக்கு எதுபோன்ற குணங்கள் இருக்க வேண்டுமானால், தன்னை நேரடியாக கத்தியைக் கொண்டு தாக்க வருபவனுக்குக்கூட, உயிருக்குப் போராடுகின்ற நிலை வந்தால், அவனைக் காப்பாற்றுபவன்தான் உண்மையான மருத்துவன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இந்த 'Maharishi Charak Shapath' சமஸ்கிருத உறுதிமொழியில் சொல்லப்பட்டிருப்பது, "மன்னனின் எதிரிகளுக்கும், மன்னனை வெறுப்பவர்களுக்கும், மக்களால் வெறுக்கப்படுபவர்களுக்கும் நான் மருத்துவம் பார்க்க மாட்டேன்" என்று மேலும் என்ன சொல்கிறார்கள் என்றால், "தீயவர்களுக்கும், தவறான வழியில் செல்பவர்களுக்கும், இறக்கும் தருவாயில் உள்ளவர்களுக்கும், இவர்களுக்கெல்லாம் நான் மருத்துவம் பார்க்க மாட்டேன்." மேலும் சொல்வதுதான் மிகவும் மோசம். 'கணவரோ அல்லது வேறு துணையோ இல்லாமல், தனியாக வரும் பெண்களுக்கு நான் மருத்துவம் பார்க்க மாட்டேன்.' ஒன்று கணவருடன் வர வேண்டும் அல்லது யாராவது ஓர் ஆண் துணையுடன் வர வேண்டும். இல்லையென்றால் அந்தப் பெண் செத்து மடிய வேண்டியதுதான். இவ்வாறு 'Maharishi Charak Shapath' என்கிற ஒரு புதிய உறுதிமொழியை இந்தியா முழுவதும் திணிப்பதற்கு ஏதோ ஒரு கூட்டம் முனைந்திருக்கிறது. என்றாலும்கூட, இன்று காலை அந்தக் கல்லூரியின் முதல்வர் அவர்கள் என்னை வீட்டில் சந்தித்து,

‘தெரியாமல் நடந்துவிட்டது, இனி வருங்காலங்களில் இதுபோன்று நடக்க வாய்ப்பில்லை’ என்றார். ஆனாலும்கூட, நான் உடனடியாக, 36 அரசுக் கல்லூரி முதல்வர்களையும் இன்று மதியம் 1-00 மணிக்கு அலுவலகத்திற்கு வரச் சொல்லியிருக்கிறேன். ஒரு கூட்டம் நடத்தி, எதிர்காலத்தில் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்து அறிவுறுத்தப்படவிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மிகுந்த கருணை உள்ளத்தோடு சொன்னார்கள், “இந்த மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வர் ஏற்கெனவே பேரிடர் காலத்தில் சிறப்பாகப் பணியாற்றினார் என்கின்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது; அவர் வருத்தமும் தெரிவித்திருப்பதால், அவரை மீண்டும் அப்பணியில் நீடிப்பதற்கு உத்தரவிடுங்கள்” என்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அப்பணியில் அவர் நீடிக்கப்படவிருக்கிறார் என்கிற செய்தியைச் சொல்லி, எதிர்காலத்தில் இதுபோன்ற புதிய உறுதிமொழிகளை யாரும் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்குத் துறைரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

கன்னியாகுமரி, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், நவீன படகுகளை இயக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கன்னியாகுமரியில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தில் நவீன படகுகளை இயக்க வேண்டியது” குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*